விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 8 சனி 24.07.2021 மலர் - 2, இதழ் - 109

# அண்ணாமலை கண்டனம்



விஜயபாரதம்

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தலைவர் மோகன் பாகவத் மதுரை வருகைக்காக, பராமரிப்புப் பணிகள் குறித்துக் கடிதம் அனுப்பிய மதுரை துணை ஆணையர் சண்முகம் விடுவிக்கப்பட்டதற்கு, தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, அண்ணாமலை வெளியிட்ட அறிக்கையில், "ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக சங்கத்தின் அகில இந்தியத் தலைவர் மோகன் பாகவத், தேசம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அமைப்பின் நிர்வாகிகளையும், பொதுமக்களையும் சந்திப்பது வழக்கமான ஒன்று. அவருக்கு உயர்மட்ட பாதுகாப்பான 'இசட் பிரிவு' பாதுகாப்பு வழங்கப்படுகிறது. உலகின் பெரிய சேவை அமைப்புகளில் ஆர்.எஸ்.எஸ் முதன்மையானது. அரசியலுக்கு அப்பாற்பட்டு தேசத்தின் வளர்ச்சிக்கும், மக்களின் உயர்வுக்கும் சேவை ஆற்றுகிற அமைப்பு ஆர்.எஸ்.எஸ்.

மோகன் பாகவத், மதுரை, கன்னியாகுமரி பகுதிகளில் 22 முதல் 26 வரை பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். நாட்டின் 'அதி உயர் பாதுகாப்பு' கொண்ட தலைவர் வருகையின்போது வழக்கமாக என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அதைப் பின்பற்றியே மதுரை மாநகராட்சி நிர்வாகிகள் செயல்பட்டுள்ளனர். இதற்காக, தமிழக அரசு மதுரை துணை ஆணையர் சண்முகத்தை பணி விடுவிப்பு செய்துள்ளது கண்டிக்கத்தக்கது. யார் யார் வந்தால் என்னென்ன பராமரிப்பு, பாதுகாப்பு என்பதற்குத் தமிழக அரசு தனியாகப் பட்டியல் வைத்திருக்கிறதா? பாதுகாப்புப் பட்டியலில் இருக்கும் தலைவர்கள் வரும்போது அவர்களுக்கு உரிய வசதி செய்து கொடுப்பது சட்ட விரோதமா? தி.மு.கவின் சாமானியத் தலைவர்கள் சென்றால்கூட, மாநகராட்சி அதிகாரிகளே நேரில் சென்று சாலை சீரமைப்பு, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்கின்றனர்.

ஆனால், அரசு தாங்கள் விரும்பாத அமைப்பின் மிக முக்கியமான தலைவர் வருகைக்கான ஏற்பாடுகளை வழக்கம்போல் செய்த அதிகாரிக்கு தண்டனை கொடுப்பது நியாயமா? இத்தகைய நடவடிக்கை தவறான முன்னுதாராணம் ஆகிவிடும். தமிழக அரசு நேர்மையாகப் பாரபட்சமின்றி நடந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும் என்றால், துணை ஆணையர் சண்முகம் பணி விடுவிப்பு ரத்து செய்யப்பட வேண்டும். இல்லையென்றால், திமுக ஆட்சியின் ஒருதலைப்பட்சமான செயலையும், அதிகாரிகளைப் பழிவாங்குகிற செயலையும் மக்கள் மன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படும்" என தெரிவித்துள்ளார்.

# அனுமதி பெறாத ஆட்சியர் அலுவலகம்



விஜயபாரதம்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு, வீரசோழபுரம் என்னுமிடத்தில் உள்ள அர்த்தநாரீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டப்பட்டு வருகிறது. கோயில் நிலத்தில், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டத் தடை கோரி ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ரங்கராஜன் நரசிம்மன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். இவ்வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், உரிய அனுமதி, ஒப்புதலைப் பெற்ற பிறகு கட்டுமானப் பணிகளைத் தொடர உத்தரவிட்டது. ஆனால், தற்போது, எந்த அனுமதியும் பெறாமல் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் தமிழக அரசுக்கு எதிராக ரங்கராஜன் நரசிம்மன், நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்ந்துள்ளார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் அமர்வு, இவ்வழக்குத் தொடர்பாக விளக்கமளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

# புதுச்சேரி வளர்ச்சி திட்டம்



விஜயபாரதம்

இலவச அரிசி திட்டம், ரேஷன் கடைகளைத் திறந்து அதன் மூலம் அரிசி விநியோகம், ஊரக வளர்ச்சி திட்டங்கள், சிறுபான்மை மக்களுக்குத் தேவையான திட்டங்கள் செயல்படுத்துவது, அத்துறைக்கென்று தனியாக ஐ.ஏ.எஸ் அதிகாரி நியமனம், உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கான ஒப்புதல், தேவையான நிதி ஒதுக்குதல் என்பது போன்ற கோரிக்கைகளுக்காக, புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், அமைச்சர் சாய் சரவணகுமார், சபாநாயகர், எம்எல்ஏக்கள் உள்ளிட்டோர் டெல்லி சென்று மத்திய அமைச்சர்களைச் சந்தித்து ஒப்புதல் பெற அடுத்த வாரம் பயணப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

# பி.எப்.கணக்கு புதிய வசதி

பி.எப் கணக்கில் உள்ள விவரங்களை அறிந்து கொள்வதற்கு ஒரு புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பணியாளர்களின் பி.எப் தொடர்பான விவரங்களை 044 – 24325050 என்ற எண்ணில் 24 மணி நேரமும் ஐ.வி.ஆர்.எஸ் (Interactive Voice Response System) சேவை மூலமாக அறிந்து கொள்ளலாம் என்று மாநில கணக்காளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்த வசதி ஜூலை 14ம் தேதி முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊழியர்களின் பொது நல நிதி, வருங்கால வைப்பு நிதி நடப்பு மற்றும் இருப்பு, நடப்பு ஆண்டில் பெற்ற கடன், விடுபட்ட தொகை, கணக்கில் உள்ள இறுதி தொகை போன்ற அனைத்து தகவல்களும் வழங்கப்படும் என்று மாநில கணக்காளர் அலுவலகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்குறுதியை நிறைவேற்ற நீதிமன்றம் அறிவுரை




விஜயபாரதம்

கடந்த ஆண்டு மார்ச் 29ம் தேதி, ஒரு செய்தியாளர்கள் சந்திப்பில், டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், ஏழை வாடகைதாரர்களின் வாடகையை அவர்கள் சார்பாக மாநில அரசே வழங்கும். எனவே அவர்களிடம் வாடகையை நில உரிமையாளர்கள் வசூலிக்க வேண்டாம் என தெரிவித்திருந்தார். ஆனால் அதனை இன்றுவரை நிறைவேற்றவில்லை.

இதனையடுத்து, அறிவித்தபடி டெல்லி அரசு வீட்டு வாடகையை செலுத்த வேண்டும் எனக் கோரி புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், நில உரிமையாளர்கள் டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இதற்கு பதில் அளித்த கெஜ்ரிவால் தரப்பு 'இது ஒரு அரசியல் அறிக்கை மட்டுமே, அதனை செயல்படுத்த முடியாது' என தெரிவித்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி பிரதிபா எம் சிங், ' முதல்வர் அளித்த வாக்குறிதியை வெறும் அரசியல் அறிக்கையாக கருத முடியாது. நல்லாட்சி என்பது ஆள்பவர்கள் தங்கள் குடிமக்களுக்கு அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதுதான். நியாயமான காரணங்கள் இன்றி அதனை நிராகரிக்கக் கூடாது. இந்த வாக்குறுதி நடைமுறைப்படுத்தக் கூடியது. எனினும் அதனை நடைமுறைப்படுத்த முடியுமா முடியாதா என்பதை அரசு 6 வார காலத்திற்குள் தெரிவிக்க வேண்டும். அதற்கான தெளிவான கொள்கையை உருவாக்க வேண்டும். பெருவாரியான மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்' என தீர்ப்பளித்தார்.

# தொடரும் தி.மு.க. அராஜகம்



விஜயபாரதம்

கோவையில் உள்ள செட்டிப்பாளையம் பகுதியில் வயதான பெண் ஒருவர் கடந்த 7 ஆண்டுகளாக ஆவின் பாலகம் நடத்தி வருகிறார். தி.மு.க தற்போது ஆட்சிக்கு வந்துள்ள சூழலில் அதனை பயன்படுத்தி தி.மு.க நிர்வாகி ராமசாமி என்பவர், அவரிடம் கடை நடத்த வேண்டும் என்றால் தினமும் எனக்கு 300 ரூபாய் மாமூல் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் கடை நடத்த முடியாது என்று மிரட்டியுள்ளார். மேலும், எழுதப்படிக்கக்கூடத் தெரியாத அந்த பெண்ணிடம் வெற்று காகிதத்தில் கையெழுத்து பெற்றுள்ளார். அவரது கடைக்கு வழங்கப்பட்டு வந்த மின் விநியோத்தையும் துண்டித்துள்ளார். இதனால் வாங்கிய பால் பொருட்களை இருப்பு வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பிரபல செய்தி தொலைக்காட்சி ஒன்றுக்கு அந்த பெண்மணி தெரிவித்துள்ளார். பெயரைக் கெடுக்கும் இது போன்ற கட்சி நிர்வாகிகள் மீது முதல்வர் நடவடிக்கை எடுப்பாரா?

# குழந்தைகளுக்கு நிமோனியா தடுப்பூசி



விஜயபாரதம்

அரசு மருத்துவமனைகளில், பி.சி.ஜி, ஹெபடைடிஸ் பி, ஓ.பி.வி, இன்ப்ளூயன்ஸா, ரோட்டா வைரஸ், எம்.ஆர் உள்ளிட்ட தடுப்பூசிகள் குழந்தைகளுக்கு போடப்படுகின்றன. ஆனால் நிமோனியா காய்ச்சல் வராமல் தடுக்கும் 'நியூமோகாக்கல்' தடுப்பூசி, அரசு மருத்துவமனைகளில் போடப்படாமல் இருந்தது. அனைத்து குழந்தைகளுக்கும் இத்தடுப்பூசி போட அவசியமில்லை என்பதால், தேசிய தடுப்பூசி அட்டவணையில் இது இணைக்கப்படாமல் இருந்தது மேலும், தனியார் மருத்துவமனைகளில் இந்த ஊசி ஒரு தவணைக்கு ரூ.4 ஆயிரம் வரை வசூலிக்கப்படுகிறது. இந்நிலையில், தேசிய தடுப்பூசி அட்டவணையில், 'நியூமோகாக்கல்' தடுப்பூசியும் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் இனி இந்த தடுப்பூசிகள் குழந்தைகளுக்கு இனி இலவசமாக போடப்படும். பிறந்த குழந்தைகளுக்கு ஒன்றரை மாதம், மூன்றரை மாதம் மற்றும் ஒன்பது மாதங்கள் என 3 தவணையாக இந்த தடுப்பூசி போடப்படும். இதன் மூலம் தமிழகத்தில் மட்டும் ஆண்டுதோறும், 9.35 லட்சம் குழந்தைகள் பயன் பெறுவார்கள்.

# சாதனையாளர்களை சந்திப்போம்



விஜயபாரதம்

சென்னை அமெரிக்க துணைத் தூதரகம் சார்பில் 'புலம் பெயர்ந்த சாதனையாளர்கள்' என்ற தலைப்பில் இணையவழி கலந்துரையாடல் நிகழ்ச்சி தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிகளில் அமெரிக்காவில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த புலம் பெயர்ந்த பாரத தேசத்தவர்கள் பங்கேற்று தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்வார்கள். ஜூலை 28ல் முதல் நிகழ்ச்சி தொடங்கவுள்ளது. இதில், பாரத வம்சாவளியைச் சேர்ந்த நாசா பொறியாளர் ஸ்வாதி மோகன் பங்கேற்று தனது அனுபவங்களை பகிர்ந்துக்கொள்கிறார். செவ்வாய் கிரகத்தில் நாசாவின் ரோவர் வாகனத்தை வெற்றிகரமாக தரை இறக்கிய பணியில் ஸ்வாதி மோகன் முக்கிய பங்காற்றினார். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் https://statedept.zoomgov.com/webinar/register/ என்ற வலைதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். சென்னைஅமெரிக்க துணைத் தூதரகத்தின் முகநூல் பகுதியான https://www.facebook.com/chennai.usconsulate/ என்ற முகவரியிலும் இந்த நிகழ்ச்சியை காணலாம். இந்த நிகழ்ச்சிகளில் பல்வேறு சாதனையாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

# எஸ்.சி, எஸ்.டி. ஆணையம் நோட்டீஸ்



விஜயபாரதம்

பட்டியலின மக்களின் உரிமைகளுக்காக செயல்படும் லாப நோக்கற்ற சட்ட செயல்பாட்டு அமைப்பான எஸ்.சி – எஸ்.டி உரிமைகள் மன்றம், ஆந்திராவில் பெரிய அளவிலான மத மாற்றங்கள் தொர்ந்து நடைபெற்று வருகிறது. பெரிய அளவிலான இந்த மாற்றங்கள் சமூக மோதல்கள், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். 'எஸ்.சி' என்ற சொல்லும் 'கிறிஸ்தவர்கள்' என்ற சொல்லும் அம்மாநிலத்தில் ஒத்ததாகிவிட்டது என்பதுதான் இன்றைய எதார்த்த நிலை. இது பட்டியல் சாதி சமூகங்களின் கலாச்சாரத்தின் மீதான தாக்குதல். கிறிஸ்தவ மிஷனரிகளின் படையெடுப்பிலிருந்து பட்டியலின சமூகங்களையும் அவர்களின் கலாச்சாரத்தையும் பாதுகாப்பது அரசின் கடமை. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்த அரசு கண்களை மூடிக்கொண்டுள்ளது' என தேசிய எஸ்.சி எஸ்.டி ஆணையத்திடம் புகார் அளித்துள்ளது. இதனையடுத்து, ஆந்திராவின் தலைமைச் செயலாளருக்கு இதனை குறித்து விசாரித்து 15 நாட்களுக்குள் அறிக்கை அளிக்க தேசிய எஸ்.சி எஸ்.டி ஆணையம் (என்.சி.எஸ்.சி) நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

---




# பயனர் தகவல்கள் பகிரப்படாது

விஜயபாரதம்

வாட்ஸ்ஆப் நிறுவனம் தன் தனிநபர் தகவல் பாதுகாப்பு தொடர்பான கொள்கையில் மாற்றம் செய்துள்ளது. அதன்படி,தன் பயனாளிகளின் தகவல்கள் தனது தாய் நிறுவனமாக முகநூலுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. மத்திய அரசு இதனை கடுமையாக எதிர்த்தது. மேலும், இதை எதிர்த்து டில்லி உயர் நீதிமன்றத்தில் பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்த வழக்கு நேற்று விசாரணையின்போது, தனிநபர் தகவல் பாதுகாப்பு தொடர்பான மசோதா நிறைவேறும்வரை, தனிநபர் கொள்கையை நிறுத்தி வைக்கிறோம், அதனால் முகநூலுடன் தன் பயனாளர்களின் தகவல்கள் பகிரப்படாது. எங்களின் புதிய கொள்கையை ஏற்காவிட்டாலும், சேவையை பயன்படுத்துவதில் எந்த தடையும் இல்லை என்றும் வாட்ஸ்ஆப் தெரிவித்துள்ளது. இதனையடுத்து, வழக்கின் விசாரணை ஆகஸ்ட் 27க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

# சட்டவிரோத ஆப்கானிஸ்தானி கைது

ஆப்கானிஸ்தானின் காபூலைச் சேர்ந்தவரான ஈத் குல் என்பவர், போலி ஆவணங்கள் மூலம் கேரள மாநிலத்தில் உள்ள கொச்சின் ஷிப்யார்ட் நிறுவனத்தில் பணிபுரிந்துள்ளார். ஒப்பந்த அடிப்படையில் அங்கு வேலை செய்த அவர், தனது உறவினரான அசாமை சேர்ந்த அபாஸ் கான் என்பவர் வழியாக போலி ஆவணங்களை ஏற்பாடு செய்துள்ளார். சி.எஸ்.ஒய். எல் அதிகாரிகள் அவரது ஆவணங்களை மறுபரிசீலனை செய்தபோது இவ்விஷயம் தெரியவந்தது. இதனையடுத்து தலைமறைவான ஈத் கொல்கத்தாவில் கைது செய்யப்பட்டார்.

இவரது தந்தை ஆப்கானிஸ்தானியர், தாய் அசாமை சேர்ந்தவர். 3 மாத சுற்றுலா விசாவில் வந்த இவரது விசா நீட்டிப்பு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அவரது மாமா அவரை கொச்சிக்கு அழைத்து வந்துள்ளார். விமானம் தாங்கி கப்பலான ஐ.என்.எஸ் விக்ராந்த் கட்டுமானம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள சூழலில், இந்த கைது முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, என்.ஐ.ஏ இவ்வழக்கை விசாரிக்கும்.

முன்னதாக, ஐ.என்.எஸ் விக்ராந்தில் இருந்து ஹார்ட் டிஸ்க்குகள் திருடப்பட்ட வழக்கையும் என்.ஐ.ஏதான் விசாரிக்கிறது. அதில் இரண்டு வட இந்திய பெயிண்டர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கேரளாவில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரமாக செயல்படுவதை அம்மாநில காவல்துறைத் தலைவர் ஓய்வுபெற்ற தினத்தன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டுவிட்டர் மீது நடவடிக்கை எடுக்கலாம்



விஜயபாரதம்

கடந்த ஜூன் மாதம் உ.பி, காஜியாபாத்தில் உள்ள அப்துல் சமத் சைபி என்ற முஸ்லிம் நபர் தாக்கப்பட்டு, 'ஜெய் ஸ்ரீ ராம்' என்று கோஷமிட வைக்கப்பட்டதாக ஒரு போலி வீடியோ பரப்பப்பட்ட வழக்கில், அரசு உத்தரவிட்டும் அந்த வீடியோவை நீக்காத டுவிட்டர் நிறுவனமும் ஒரு குற்றவாளியாக சேர்க்கப்பட்டது. இவ்வழக்கில் டுவிட்டர் நிறுவன நிர்வாகி மனீஷ் மகேஷ்வரி கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போது, 'அந்த வீடியோ சமூக ஒற்றுமையையும் அமைதியையும் சீர்குலைக்கும் நோக்கிலேயே திட்டமிட்டு பரப்பப்பட்டது தெளிவாக தெரிகிறது. அதனை டுவிட்டர் நீக்கத்தவறியது தவறு. மனீஷ் தற்போது டுவிட்டரின் எம்.டியாக இல்லை என்றாலும் அதன் பிரதிநிதியாக இவ்வழக்கில் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இல்லை என்றால் காவல்துறை அவரை தாராளமாக கைது செய்யலாம்' என உயே நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.




விஜயபாரதம்

குரு பூர்ணிமா என்பது நமது ஹிந்து தர்மத்தில் மிகவும் புனிதமான நாட்களில் ஒன்று. குரு பூர்ணிமா நாளில் நம்முடைய வாழ்க்கையில் நமக்கு வழிகாட்டிய குருவை வணங்கி ஆசி பெற்றால் குருவருளுடன் திருவருளும் கிடைக்கும். குரு பூர்ணிமா என்பது சாதாரண உயிரைக்கூட முழுமையை உணர்ந்து இறை நிலையை நோக்கி உயர்த்தக் கூடியத் திருநாள்.

சமஸ்கிருத வார்த்தையான 'குரு' இரண்டு வேர்களைக் கொண்டுள்ளது. 'கு'என்றால் 'இருள்' என்றும் 'ரு' என்றால் நீக்குவது என்று பொருள். நமது மனதில் உள்ள அறியாமை எனும் இருளை நீக்குபவர் என்று பொருள்.

எந்த விதமான காரணமும் இல்லாமல் வெறும் கருணை மாத்திரத்தால் மட்டுமே, நமக்கு ஞான செல்வத்தை அள்ளி தரும் குருநாதருக்கு 'அவ்யாஜ கருணாமூர்த்தி' என்றே ஒரு திருநாமமும் உண்டு.

மாதா பிதா குரு தெய்வம் என்பார்கள், இதில் மாதா என்பது இடகலை, பிதா பிங்கலை. குரு என்பது சுழுமுனை சுவாசம். இந்த சுழுமுனை சுவாசத்தின் மூலமாகவே மனமற்ற தெய்வ நிலையை உணர முடியும் என்பதே சித்தர்கள் கண்ட சிவராஜ யோகதத்துவம் என்றும் சொல்லப்படுகிறது.

இந்த நன்னாளில் தான் வேத வியாசர் பிறந்ததாக கூறப்படுகிறது, எனவே இது வியாச பூர்ணிமா என்றும் அழைக்கப்படுகிறது. வேத வியாசர் வேதங்களை, ரிக், யஜுர், சாமம் அதர்வணம் என நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தியவர். உலகின் பிரம்மாண்ட காவியமான மகாபாரதம், 18 புராணங்கள், பிரம்மசூத்திரம் முதலானவற்றை நமக்களித்தவரும் இவரே. மஹாபாரதத்தை, வியாச மகரிஷி கூற அதனை விநாயகப் பெருமான் எழுதினார் என்கிறது புராணம்.

அழியக் கூடிய சொத்துக்கள் கிடைப்பதற்கே, ஒருவர் பல பாடுகள் பட்டாக வேண்டும் எனும் நிலையில் அழியாத சொத்தான 'ஞானத்தை' நமக்கு அளிக்க வேண்டுமென்றால், அது குருவினால் மட்டுமே முடியும்.

பூர்ண நிலையில் தன்னுள் இருக்கும் குருத் தன்மையை உணர ஒவ்வோரு உயிர்களுக்கும் சாதகமாக அமைந்த நாள்தான் குரு பூர்ணிமா.

# தேசிய வெப்ப பொறியாளர் தினம்



விஜயபாரதம்

ஆண்டின் வெப்பமான நாட்களில் ஒன்றில் வெப்ப பொறியியலாளர்களின் பங்களிப்புகளுக்கு ஊக்குவிப்பதற்காக, அமெரிக்காவில் தேசிய வெப்ப பொறியாளர்கள் தினம் ஜூலை 24 அன்று அனுசரிக்கப்படுகிறது. இயந்திர பொறியியல், கட்டட பொறியியல், எலெக்ட்ரிக்கல், எலெக்ட்ரானிக்ஸ் என அனைத்து பல்வேறு பொறியியல் துறைகளிலும் வெப்ப மேலாண்மை அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. அந்த பொருட்களின் நீண்ட ஆயுளுக்கும் நம்பகமான செயல்பாடுகளுக்கும் வெப்ப மேலாண்மை முக்கியமானது. ஆனால் இதனை பெரும்பாலானவர்கள் அறிவதில்லை. வெப்பப் பொறியியல் நாட்டிற்கான தொழில்நுட்ப வளர்ச்சியின் மையத்திற்கு பங்களிக்கின்றன. இந்த வளர்ச்சி வெப்ப பொறியாளர்கள் இல்லாமல் செயல்படாது. வெப்ப பொறியியலாளர்களுக்கு, நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ், பெரிய தரவு மையங்கள், விண்வெளி எலக்ட்ரானிக்ஸ், பயோமெடிக்கல் ஆகியவற்றில் பணிபுரிய பல வாய்ப்புகள் உள்ளன. மேம்பட்ட வெப்பத் தீர்வுகள் எலக்ட்ரானிக்ஸ் துறையில் புதுமையான, உயர் தரமான மற்றும் செலவு குறைந்த வெப்ப மேலாண்மை மற்றும் மின்னணு பேக்கேஜிங் தீர்வுகளை வழங்க வெப்ப பொறியாளர்களின் கண்டுபிடிப்பு மற்றும் அர்ப்பணிப்பை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த தினம் கொண்டாடப்படுகிறது.


விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

93613 99006

# மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களுக்கு அஞ்சலி

நேற்று காலை காலை 11.30 மணிக்கு தாமிரபரணியில் உயிர்நீத்த மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களுக்கு பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் பூத்தூவி அஞ்சலி செலுத்தினார்.



விஜயபாரதம்

# புத்தகம் வழங்கல்



விஜயபாரதம்

ஆர்.எஸ்.எஸ் வடதமிழகம் சம்பர்க விபாக் சார்பில் விஷ்வ ஹிந்து பரிஷத் அகில பாரத இணைப் பொதுச்செயலாளர் கோ ஸ்தாணுமாலயன் மற்றும் தென்பாரத அமைப்பாளர் பி.எம் நாகராஜன் ஆகியோருக்கு, பிராந்த சஹ சம்பர்க ப்ரமுக் இராம இராஜசேகர், கொரோனா தடுப்புப்பணி அகில பாரத சேவைகள் விபரம் குறித்த புத்தகமான 'Coffee Table book' வழங்கினார்.

# ஹிந்து முன்னணியினர் கைது



விஜயபாரதம்

முஸ்லிம் கிறிஸ்தவர்களின் திருவிழாக்களை கொரோனாவைக் காரணம் காட்டி தடுக்காத தி.மு.க தலைமையிலான தமிழக அரசு, அவற்றை கண்டும் காணாமலும் விட்டுவிடுகிறது. ஆனால், சங்கரன்கோவில் ஆடித்தபசு விழாவிற்கு மட்டும் பக்தர்களுக்கு அனுமதி அளிக்க மறுக்கிறது. எனவே, இதனை எத்ரிக்கும்விதமாக, கோயில் நுழைவு போராட்டம் அறிவித்தது இந்து முன்னணி. நேற்று நடைபெற்ற கோவில் நுழைவு போராட்டத்தை தடுத்து நிறுத்தியது தமிழக அரசின் காவல்துறை. தடையை மீறிச் சென்ற மாநில துணைத் தலைவர் வி.பி. ஜெயக்குமார், மாநில செயலாளர் குற்றாலநாதன் உட்பட 75 பேர் கைது செய்யப்பட்டனர்.

# வலையில் சிக்கிய மீம்கள்

'ஏழைகளின் வாடகை பாக்கி செலுத்தப்படும் என்ற முதல்வர் கெஜ்ரிவாலின் வாக்குறுதியை நிறைவேற்றும் வழியை பாருங்கள்' - டெல்லி உயர் நீதிமன்றம் !!




தமிழர்களின் மைண்ட் வாய்ஸ்: ஜட்ஜ் ஐயா, அப்படியே தமிழ் நாட்டிலேயும் பெட்ரோல் விலை குறைப்பு, பெண்களுக்கு மாதம் 1,000 ரூபாய் அப்படின்னு ஏகப்பட்ட வாக்குறுதிகள் இன்னும் நிறைவேறல. அப்படியே கொஞ்சம் இங்கேயும் வந்துட்டு போங்களேன்

எப்போது அந்த 1000 ரூபா தருவிங்க?



கொடுக்கலாம், ஆனால் கரண்ட் பில் 10,000 வரும் பரவாலையா??